## *மதிப்பீட்டு அறிக்கை :*











தங்களின் வேண்டுகோளுக்கு இணங்க 24.08.2017 அன்று **கடனடிய தமிழர் அறக்கட்டளை** நிதியத்தினால் (இதன் பின்னர் க.அ எனக் குறிப்பிடப்படும்) வழங்கப்பட்ட நிதியுதவியின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள மலசல கூடங்களை மேற்பார்வையிட்டிருந்தேன். தாங்கள் **10** மலசல கூடங்களுக்கான நிதியுதவியை வழங்கியிருப்பதாக குற்பிட்டிருந்தீர்கள் எனினும் **9** மலசல கூடங்கள் மட்டுமே கட்டிமுடிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலும் ஒன்றிற்கு கதவுகள் வைக்கப்படவில்லை. இன்னும் இரண்டிற்கான வேலைகள் முற்றாக முடியவில்லை. அதில் ஒன்று பயன்படுத்தக் கூடிய நிலையிலும் இல்லை. அவற்றின் விபரங்களும் அதற்கான காரணங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

அந்த வகையில் பின்வரும் இடங்களுக்கு சென்று நிலைமைகளை பார்வையிட்டதுடன் பயனாளிகளுடனும் கலந்துரையாடியிருந்தோம்.

**இடம் : செல்வபுரம்**

1. **பயனாளியின் பெயர் : பகிரதன் (30)**

இவர் ஒரு போராளி. யுத்தத்தின் போது காயப்பட்டு> இடுப்பிற்கு கீழ் இயங்க முடியாத நிலையில் இருக்கின்றார். நாங்கள் இவருடைய இல்லத்திற்கு சென்றிருந்த போது> அவர் அங்கில்லை. இதனால் இவருடன் பேச முடியாமல் போய்விட்டது. இவர் கையடக்க தொலைபேசி திருத்தும் வேலை செய்கிறார் என்பதை இவருடைய அறையை பார்த்தபோது விளங்கிக்கொள்ள முடிந்தது. அத்துடன் “காடை” வளர்ப்பிலும் ஈடுபட்டு வருகின்றார். இவருடைய சகோதரரும் ஒரு போராளியாக இருந்து பின்னர்> இறுதியுத்தத்தின் போது சரணடைந்து காணாமல் போயிருக்கிறார். தங்களது உதவியின் கீழ் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள மலசல கூடம் இவருடைய அறையிலேயே அமைக்கப்பட்டிருந்தது. இவருடைய இலகுவான பாவனைக்கு ஏற்ப இது தெரிவுசெய்யப்பட்டிருக்கலாம்.



இடம் : மல்லாவி – அனிச்சன் குளம்

2. அருளானந்தம் அருள்தாசன் (45)

இவரும் ஒரு போராளி. சண்டையில் காலை இழந்திருக்கிறார். இவருக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. இருவர் பெண் பிள்ளைகள் ஆவர். மாடு வளர்ப்பு மற்றும் தோட்டம் செய்வதாக குறிப்பிட்டார். இந்த உதவியால் தான் மிகுந்த பயனடைந்தாக குறிப்பிட்டார். அவர் க.அ வழங்கிய நிதியுதவியிற்கு மேலதிகமாக தனது பணத்தையும் செலவழித்து மலசல கூடத்தை தனது விருப்பதற்கு ஏற்றாற் போல் அழகாக அமைத்திருக்கிறார். இதற்கு இரண்டு லட்சம் வரையில் சென்றதாக குறிப்பிட்டார்.






இடம் : கல்விழான்

3. **லூர்து மிஸ்லா (46)**

இவர் நோயின் காரணமாக நடக்கும் வலுவை இழந்திருக்கிறார். இதனால் சக்கர நாற்காலியிலேயே இவரது வாழ்வு கழிகிறது. மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். இருவர் படிக்கின்றனர். இவரது கணவர் கூலித் தொழிலுக்கு செல்கின்றார். அதுதான் இவர்களது வருமானம். மசல கூட்டத்திற்கான உதவி போதாது என்று குறிப்பிட்டார். இதனால் இன்னும் வேலைகளை முடிக்க முடியாமல் இருப்பதாகவும் குறிப்பிட்டார். தங்களுக்கு வீட்டுத் தோட்டம் கோழி வளர்ப்பிற்கு உதவினால் தங்களது வருமாணத்திற்கு உதவியாக இருக்குமென்று குறிப்பிட்டார். இவருடைய கணவர் எங்களுடன் பேசும் போது> தான் ஒரு தோட்டக் காரண் என்றும் ஆனால் அதற்கான பணம் இல்லாமையால் கூலித் தொழிலுக்கு செல்வதாகவும் குறிப்பிட்டார்.






**இடம் : கல்விழான்**

**4. பஸ்தியாம் பிள்ளை றொசான் (33)**

இவர் ஒரு போராளி. 2008இல் இடம்பெற்ற சண்டையில் ஆர்.பி.ஜி தாக்குதலில் இடுப்பில் காயப்பட்டு நடக்க முடியாத நிலையில் இருக்கிறார். இரண்டு கால்களின் பாதங்களிலும் இப்போதும் காயங்கள் உண்டு. இதற்காக வாரம் ஒரு முறை வைத்திசாலைக்கு சென்று வருகிறார். இதற்கான செலவுகளை சமாளிக்க முடியாமல் மிகுந்த சிரமத்திற்குள்ளாகியிருப்பதாக குறிப்பிட்டார். சகோதரியே இவரை பராமரித்து வருகின்றார். இதனால் அவர் திருமணம் செய்யவில்லை. இவர்களுக்கென சொந்த வீடும் இல்லை. மூத்த சகோதரனின் வீட்டில்தான் வசித்து வருகின்றனர். இவரது மருத்துவச் செலவுகளுக்காக மிகவும் கஸ்டப்படுவதாகவும் அதற்கு எவராவது உதவ மாட்டார்களா என்று வினவினார். தங்களுக்கு ஒரு சிறு கடை போடுவதற்கு உதவினால் அதனைக் கொண்டு தங்களால் சீவிக்க முடியுமென்றும் குறிப்பிட்டார்.






**இடம் : மல்லாவி – அனிச்சன் குளம்**

5. **சிவசம்பு பன்னீர்செல்வன்**

இவரும் ஒரு போராளி. சண்டையில் காலை இழந்திருக்கிறார். ஒளிரும் வாழ்வு நிறுவனத்தில் இணைப்பாளராக பணிபுரிவதாக் குறிப்பிட்டார். இவரே எங்களை அனைவரது இலங்களுக்கும் அழைத்துச் சென்றார். இவருக்கு இரண்டு சிறிய பிள்ளைகள் உண்டு. இவர் தனது பணத்தையும் செலவழித்து மலசல கூடத்தை தனது விருப்பிற்கு ஏற்றவாறு அமைத்திருக்கிறார். இதற்கு இரண்டு லட்சத்திற்கும் மேலதிகமாக சென்றதாக குறிப்பிட்டார்.






**இடம் : புதுக்குடியிருப்பு**

6. **சோமசுந்தரம் பத்மநாதன் (44)**

இவர் ஒரு போராளி. இறுதிச் சண்டையில் காலை இழந்து தற்போடு இருப்பிற்கு கீழ் செயலிழந்த நிலையில் வாழ்கிறார். தற்போது தான் இவ்வாறு நன்றாக வாழ்வதற்கு புலம்பெயர் சமூகத்தின் உதவிதான் காரணம் என்றார். வருமானத்திற்காக ஓட்டோ ஓடுகிறார். இவரது மனைவி இவரை ஓட்டோவில் தூக்கி இருத்தினால் அதன் பின்னர் அதனை இயக்கிச் செல்கிறார். இவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். போராட்டத்தில் இணைந்ததன் பின்னர் புதுக்குடியிருப்பில் திருமணம் செய்திருக்கிறார்.






**இடம் : வெள்ளாங் குளம்**

7. **கோபால் சுதர்சினி (22)**

இவர் பிறப்பிலேயே நடக்க முடியாதவர். இடுப்பிற்கு கீழ் இயக்கம் இல்லை. சற்று சத்தமாக பேசவும் முடியாதவர். மனநிலையும் ஓரளவு சரியில்லை. இவரை தாயாரே பராமரித்து வருகின்றார்.






**இடம் : முள்ளியவல - பொன்னகர்**

8. **குப்புசாமி ஆறுமுகம் (57)**

யுத்தத்தின் போது செல்பட்டு காலை இழந்திருக்கிறார். இடுப்பிற்கு கீழ் இயங்க முடியாத நிலையில் இருக்கிறார். இவரது மனைவி வங்கி ஒன்றில் சுத்தம் செய்யும் வேலை செய்துவருகிறார். ஒரு நாளைக்கு 400 ரூபாவே இவரது வருமாணம். இவரது மகள் ஒருவரும் சோதியா படையணயில் இருந்திருக்கிறார். இறுதி யுத்தத்தின் போது காணாமல் போயிருக்கிறார். தற்போது இரண்டு பெண் பிள்ளைகள் இக்கின்றனர். மிகவும் வறுமையான நிலைமை. இதனால் இவர் மலசல கூடத்தை முடிக்கவுமில்லை. அந்தப் பணத்தை சிறியளவில் தனது மருத்துவச் செலவுக்காக பயன்படுத்திவிட்டதாகவும் குறிப்பிட்டார். நாங்கள் சந்தித்த பயனாளிகளில் மிகவும் வறுமை நிலையில் இருப்பவர் இவரே.





**இடம் : அலம்பில் - வடக்கு**

9. **கனகசபை ரவிச்சந்திரன் (44)**

யுத்தத்தின் போது செல்விழுந்து கால்களை இழந்திருக்கிறார். இடுப்பிற்கு கீழ் இயங்கமற்ற நிலமை. தகப்பனுடன் வாழ்ந்து வருகிறார். தகப்பனது பராமரிப்பில் இருக்கிறார். வருமானத்திற்காக வீட்டுத் தோட்டத்தை நம்பியிருப்பதாக குறிப்பிட்டார்.






**பொதுவான அவதானம்** :

திட்டத்தை அமுல்படுத்திய ஒளிரும்வாழ்வு நிறுவனம் பணத்தை பயனாளிகளிடம் வழங்கியிருக்கிறது. பயனாளிகளே மலசல கூடத்தை அமைத்திருக்கின்றனர். இதில் ஒரு சிலர் தங்களின் பணத்தையும் போட்டு> தாங்கள் விரும்பியவாறு மலசல கூடத்தை அமைத்திருக்கின்றனர். நாம் பயனாளிடம் உரையாடிபோது> **லூர்து மிஸ்லா** தனக்கு வழங்கப்பட்ட நிதியுதவி போதாது என்றார். **குப்புசாமி ஆறுமுகம்** வழங்கப்பட்ட நிதியுதவியலிருந்து ஒரு சிறு பகுதியை தனது மருத்துவச் செலவிற்காக எடுத்திருக்கின்றார். அதனால் அவரால் மலசல கூடத்தை கட்டிமுடிக்க முடியவில்லை. இவர்களுடன் உரையாடியதில் ஒரு விடயம் தெளிவாகியது. அதாவது> இவ்வாறானவர்கள் அன்றாட சீவியத்திற்கே மிகவும் கஸ்ரப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறானவர்களுக்கு ஒரு மலசல கூடம் தேவையாக இருக்கின்றது ஆனாலும் பணத்தை இவர்களிடம் வழங்கினால் அதில் ஒரு தொகையை தங்களது அன்றாட சீவியத்திற்கு எடுப்பதற்கான வாய்ப்பு உண்டு. உதாரணமாக ஒருவர் தனது மருத்துவச் செலவுக்காக கையேந்தும் நிலையில் இருக்கின்ற போது அவர் மலசல கூடத்தை அமைப்பார் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. எனவே இவ்வாறானவர்களுக்கு உதவும் போது குறித்த நிறுவனமே அனைத்தையும் பொறுப்பெடுப்பதே சரியானதாக இருக்கும். நிறுவனம் இதற்கென ஒரு கட்டட ஒப்பந்த காரருடன் உன்பாடு ஒன்றைச் செய்து கொள்ளலாம். அவர்களுக்கு நிதியை பகுதியளவில் வழங்கி வேலைகளை முடித்திருந்தால் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது.

மேலும் பயனாளிகளுடன் பேசும் போது ஒருவர் 130000 ரூபா தந்ததாகவும், இன்னொருவர் 120000 ரூபா தந்ததாகவும் இன்னொருவர் இன்னும் 10000 ரூபா தனக்குத் தரவில்லை என்றும் குறிப்பிட்டனர். எங்களை அழைத்துச் சென்றவரிடம் இதனை வினவிய போது> அவர்கள் தெளிவில்லாமல் பேசுகின்றனர் என்றார். அனைவருக்கும் ஒரே மாதிரியாகவே நிதி வழங்கப்பட்டதாகவும் ஆனால் சிலர் வேலைகளை முடிக்காத போது அவர்களுக்கு வழங்க வேண்டிய தொகையை நிறுத்தி வைத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்த இடங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று மிகவும் தொலைவில் இருக்கின்றன. சில இடங்களுக்கு வாகனங்களில் செல்வதே மிகவும் சிரமமாக இருந்தது. பயனாளிகள் தெரிவுகளில் எந்தவொரு குறைபாடும் இல்லை. மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட> உண்மையிலேயே மலசல கூட வசதிக்கான தேவை இருப்பவர்களுக்குத்தான் உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் ஒவ்வொரு பயனாளிகளும் ஒரே மாதிரியான குடும்பப் பின்னணியை கொண்டவர்கள் அல்ல. சிலர் மிகவும் வறுமைப்பட்டவர்கள். சொந்தமாக தொழில் செய்ய வசதியின்றி கூலித் தொழிலுக்குச் செல்லுபவர்கள். இன்னும் சிலரோ தங்களின் பணத்தையும் போட்டு கட்டக் கூடியவர்களாக இருந்திருக்கின்றனர். நீங்கள் இவர்கள் தொடர்பான வீடியோ கிளிப்பை பார்வையிடும் போது நிலைமைகளை இன்னும் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

**நாம் சென்ற இடங்களின் பொதுவான நிலைமை.**

யுத்தத்திற்கு பின்னர் கிளிநொச்சியில் பெரியளவில் அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதான ஒரு தோற்றத்தையே அரசாங்கம் காண்பித்துவருகிறது. கிளிநொச்சி பிரதான வீதியையும் அதனை அண்டிய பகுதிகளையும் பார்வையிடும் ஒருவருக்கு அவ்வாறானதொரு புரிதலே ஏற்படலாம் ஆனால் உள்ளுக்குள் சென்றால் நிலைமைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. நாங்கள் சென்ற இடங்கள் அனைத்தும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன.. வீதிகளால் பயணிக்க முடியவில்லை. தண்ணீர் வசதியில்லை. **அமைதிபுரம்** என்னும் ஒரு இடத்தைப் பற்றி குறிப்பிட்டனர். அங்கு ஒரு வேளை கூட உணவின்றி மக்கள் கஸ்டப்படுகின்றனர். இளணி வழுக்கலை மட்டுமே உண்டு வாழும் மக்களும் இருக்கின்றனர். ஆனால் கிளிநொச்சி பிரதான வீதியை மட்டும் பார்ப்பவர்களுக்கு மக்களின் இன்னொரு வாழ்க்கை ஒரு போதுமே தெரியப்போவதில்லை.

**‘ஒளிரும்வாழ்வு’ நிறுவனம் பற்றி** :

நிறுவனம் தங்களுக்கென சொந்தமான காணியில் அலுவலகம் ஒன்றை ஸ்தாபித்துள்ளது. அருகே அரிசி மா அரைக்கும் ஆலை ஒன்றையும் நடத்திவருகிறது. அதே வேளை மல்லாவி பிரதேச செயலகத்தின் சிற்றுண்டி சாலையையும் நடத்திவருகிறது> அத்துடன் தையல் கடை ஒன்றையும் நடத்திவருகிறது. இதன் மூலம் உள்ளூரில் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் வலுவிழந்தவர்களுக்கு உதவி வருவதாகவும் தெரிவித்தனர். இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் அனைவரும் வலுவிழந்தவர்களாவர். இதன் தலைவர் ஒரு முன்னாள் போராளி. முன்னாள் போராளிகளே அனைத்தையும் வழிநடத்தி வருகின்றனர். இதனால் இவர்களிடம் ஒரு தூர நோக்கும் திட்டமிடலும் இருப்பதை அவதானிக்க முடிந்தது.

**சிபார்சுகள்** :

புலம்பெயர் சமூகத்தைச் சேர்ந்த அமைப்புக்களும் தனிநபர்களுமாக> பலரும் பல்வேறு உதவிகளை செய்து வருகின்றனர். அங்குள்ளவர்களுடன் கலந்துரையாடிய போது இதனை அறிந்துகொள்ள முடிந்தது. ஆட்சி மாற்றத்திற்கு பின்னர் நாட்டிற்குள் முன்னரை விடவும் புலம்பெயர் மக்கள் அதிகமாக வந்து செல்கின்றனர். இவ்வாறு வந்து செல்பவர்கள் தங்களுக்கு தெரிந்த நபர்களின் ஊடாக சில உதவிகளை செய்கின்றனர். இவ்வாறான உதவிகள் அதிகம் தங்களின் உறவினர்கள் அல்லது நன்பர்கள் வழியாக மேற்கொள்ளப்படும் தெரிவுகளாகவே இருக்கின்றன. இதில் சில பிரச்சினைகளும் உண்டு. அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராயாமல் இவர்கள் உதவிகளை செய்வதால் உண்மையிலேயே உதவிகள் தேவைப்படுவர்களுக்கு பெரும்பாலும் உதவிகள் கிடைக்காமல் போவதற்கும் வாய்ப்புண்டு. ஆனால் இன்னும் சிலரோ அங்குள்ள சமூக அமைப்புக்களின் ஊடாகவே உதவிகளை மேற்கொண்டு வருகின்றனர். இது மிகவும் சிறந்த வழிமுறை. தனிநபர்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் உதவிகள் கண்காணிப்படுவதில்லை. இதனால் அவற்றை பயனாளிகள் தவறாக பயன்படுத்தவும் வாய்ப்புண்டு. உதாரணமாக ஆடு மாடுகளை வழங்கும் போது அது தொடர்பில் கண்காணிப்பு அவசியம். அமைப்புக்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் போதும் கூட திட்டம் பிறிதொரு தொடர்பின் ஊடாக கண்காணிப்பட வேண்டும்.

அங்குள்ள நிலைமைகளை அவதானித்த போது பிறிதொரு முக்கியமான விடயத்தையும் அவதானிக்க முடிந்தது. இது வடக்கு கிழக்கு முழுவதற்கும் பொருந்தும். தேவைகள் ஏராளாக இருக்கின்றன. இந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக புலம்பெயர் சமூகம் எவ்வளவு காலத்திற்கு உதவி செய்யப் போகிறது? எனவே புலம்பெயர் சமூகம் உள்ளுரிலேயே வருமாணத் திரட்டிக் கொள்ளக் கூடிய சிறிய நடுத்தரமான வர்த்தக முயற்சிகளுக்கு உதவுவது முக்கியம். இதனை தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு மாவட்டங்களிலும் பண்ணைத் திட்டங்கள் - நடுத்தர வர்த்தக முயற்சிகள் ஆகியவற்றுக்கு உதவுவதன் வாயிலாக உள்ளுரிலேயே வருமாண முலங்களை உருவாக்கிக் கொள்வதற்கான வாய்புக்களை ஏற்படுத்தலாம். இதுவே நீண்டகால நோக்கில் பயனுடைய முயற்சிகளாக இருக்க முடியும். உள்ளுரில் வருமாணங்களை திரட்டிக்கொள்ளக் கூடிய தொழில் முயற்சிகள் சில கைவசம் இருப்பின் அதனைக் கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முடியும். புலம்பெயர் அமைப்புக்கள் இதனை கருத்தில் கொள்வதே நீண்டகால நோக்கில் சிறந்தது. புலம்பெயர் சூழிலில் வாழும் ஒவ்வொருவருக்கும் உதவி செய்வதிலும் ஒரு எல்லையுண்டு. எனவே உள்ளுரில் வருமாண மூலங்களை உருவாக்கிவிட்டால் அவற்றைக் கொண்டு பல்வேறு செயற்பாடுகளை குறித்த அமைப்புக்கள் முன்னெடுக்க முடியும்.

யதீந்திரா

திருகோணமலை

25-08-2017